©
GOVERNMENT OF TAMIL NADU
2014

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Rs. 1.60 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

**EXTRAORDINARY** PUBLISHED BY AUTHORITY

No. 109] CHENNAI, THURSDAY, MAY 29, 2014
Vaikasi 15, Jaya, Thiruvalluvar Aandu–2045

## Part VI—Section 2

**Notifications or Orders of interest to a section of the public issued by Heads of Departments, etc.**

### NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.

**COLLECTORS AND LOCAL AUTHORITIES**

**மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் ஊராட்சிகளின் ஆய்வாளர், கன்னியாகுமரி மாவட்டம்.**

**கன்னியாகுமரி மாவட்டம், இராஜாக்கமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தை சார்ந்த பள்ளம்துறை ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி. எஸ். மரியபுரோஸ் என்பவரை தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 205 (11)-ன்கீழ் பதவியிலிருந்து நீக்கம் செய்தல் பற்றிய அறிவிக்கை**

*(ந.க.எண் அ4/193/2013)*

**No. VI(2)/133(a-1)/2014.**

கன்னியாகுமரி மாவட்டம், இராஜாக்கமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தை சார்ந்த பள்ளம்துறை ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி. எஸ். மரியபுரோஸ் என்பவர் விதிகளுக்கு முறனாக ஊராட்சி நிதியினை கையாடல் செய்யும் நோக்கில் செயல்பட்டது தொடர்பாக திருமதி. எஸ். மரியபுரோஸ் என்பவருக்கு ஊராட்சி மன்றத் தலைவர் பதவியிலிருந்து தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 205(1) (அ)-கீழ் குற்றச்சாட்டுகளுக்கு விளக்கம் கோரப்பட்டது.

பள்ளம்துறை ஊராட்சியில் ஆய்வின் பொழுது ஊராட்சி நிதி அரசு விதிமுறைகளை மீறி கையாடல் செய்யப்பட்டுள்ளது கண்டறியப்பட்டது. இதனை அடிப்படையாக கொண்டு குற்றச்சாட்டுகள் பிறப்பிக்கப்பட்டு, அதற்காக ஊராட்சித் தலைவரிடமிருந்து பெறப்பட்ட பதில்கள், ஊராட்சி மன்றத்தின் கருத்துக்கள், ஊராட்சித் தலைவரின் மறு விளக்கங்கள் ஆகியவை என்னால் சுதந்திரமாகவும், நியாயமாகவும் கூர்ந்தாய்வு செய்யப்பட்டது.

பள்ளம்துறை ஊராட்சித் தலைவரால் குற்றச்சாட்டுகளுக்கு அளிக்கப்பட்ட பதில்கள், மறு விளக்கம் ஆகியவை எனது சுய பரிசீலனையின் அடிப்படையில் ஆய்வு செய்யப்பட்டதில், பள்ளம்துறை ஊராட்சி மன்றத் தலைவர், ஊராட்சி நிதியினை கையாடல் செய்யும் நோக்கில் செயல்பட்டது, ஊராட்சி ஆவணங்களை மறைத்தல், அரசு விதிகளை கடைபிடிக்க தவறியது, உரிய சட்ட திட்டங்களை மீறி தன்னிச்சையாக செயல்பட்டது ஆகியவை ஐயமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதாலும், ஊராட்சியில் நிதிமுறைகேடுகள் நடந்துள்ளதை ஊராட்சி மன்றம் ஏற்றுக் கொண்டுள்ளதாலும், தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 205 (11)-ன்படி மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் ஊராட்சிகளின் ஆய்வாளருக்குள்ள அதிகாரத்தின் படி பள்ளம்துறை ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி. வி. மரியபுரோஸ் என்பவரை அன்னார் வகித்து வந்த ஊராட்சித் தலைவர் பதவியிலிருந்து நீக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த அறிவிக்கையினை தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 உட்பிரிவு 205 (12)-ன்படி மறு பரிசீலனை செய்வதற்கு அரசிற்கு அதிகாரம் உண்டு.

இந்த அறிவிக்கை தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 262(1)-ன்படி ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்பட்டு, அறிவிக்கை திருமதி. எஸ். மரியபுரோஸ் என்பவரிடம் விதிகளின்படி சார்பு செய்யப்பட்ட தேதி முதல் அவரது பதவி நீக்கம் அமுலுக்கு வரும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

**கன்னியாகுமரி மாவட்டம், இராஜாக்கமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தை சார்ந்த பள்ளம்துறை ஊராட்சி மன்றத் துணைத் தலைவர் திருமதி. பி. ரெஜிஸ்மேரி என்பவரை தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 206 (11)-ன் கீழ் பதவியிலிருந்து நீக்கம் செய்தல் பற்றிய அறிவிக்கை**

*(ந.க.எண் அ4/193/2013)*

**No. VI(2)/133(a-2)/2014.**

கன்னியாகுமரி மாவட்டம், இராஜாக்கமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தை சார்ந்த பள்ளம்துறை ஊராட்சி மன்றத் துணைத் தலைவர் திருமதி. பி. ரெஜிஸ்மேரி என்பவர் விதிகளுக்கு முறனாக ஊராட்சி நிதியினை கையாடல் செய்து, இழப்பீட்டிற்கு உடந்தையாக செயல்பட்டது தொடர்பாக திருமதி. பி. ரெஜிஸ்மேரி என்பவருக்கு ஊராட்சி மன்றத் துணைத்தலைவர் பதவியிலிருந்து தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 206(1) (அ)- கீழ் குற்றச்சாட்டுகளுக்கு விளக்கம் கோரப்பட்டது.

பள்ளம்துறை ஊராட்சியில் ஆய்வின் பொழுது ஊராட்சி நிதி அரசு விதிமுறைகளை மீறி கையாடல் செய்யப்பட்டுள்ளது கண்டறியப்பட்டது. இதனை அடிப்படையாக கொண்டு குற்றச்சாட்டுகள் பிறப்பிக்கப்பட்டு, அதற்காக ஊராட்சித் துணைத் தலைவரிடமிருந்து பெறப்பட்ட பதில்கள், ஊராட்சி மன்றத்தின் கருத்துக்கள், ஊராட்சித் துணைத் தலைவரின் மறு விளக்கங்கள் ஆகியவை என்னால் சுதந்திரமாகவும், நியாயமாகவும் கூர்ந்தாய்வு செய்யப்பட்டது.

பள்ளம்துறை ஊராட்சித் துணைத் தலைவரால் குற்றச்சாட்டுகளுக்கு அளிக்கப்பட்ட பதில்கள், மறு விளக்கம் ஆகியவை எனது சுய பரிசீலனையின் அடிப்படையில் ஆய்வு செய்யப்பட்டதில், பள்ளம்துறை ஊராட்சி மன்றத் துணைத்தலைவர், ஊராட்சி நிதியினை கையாடல் செய்யும் நோக்கில் செயல்பட்டது, ஊராட்சி ஆவணங்களை மறைத்தல், அரசு விதிகளை கடைபிடிக்க தவறியது, உரிய சட்ட திட்டங்களை மீறி தன்னிச்சையாக செயல்பட்டது ஆகியவற்றிற்கு உடந்தையாக செயல்பட்டுள்ளது ஐயமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதாலும், ஊராட்சியில் நிதிமுறைகேடுகள் நடந்துள்ளதை ஊராட்சி மன்றம் ஏற்றுக் கொண்டுள்ளதாலும், தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 206 (11) ன் படி மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் ஊராட்சிகளின் ஆய்வாளருக்குள்ள அதிகாரத்தின் படி பள்ளம்துறை ஊராட்சி மன்றத் துணைத்தலைவர் திருமதி. பி. ரெஜிஸ்மேரி என்பவரை அன்னார் வகித்து வந்த ஊராட்சித் துணைத் தலைவர் பதவியிலிருந்து நீக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த அறிவிக்கையினை தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 உட்பிரிவு 206 (12)-ன்படி மறு பரிசீலனை செய்வதற்கு அரசிற்கு அதிகாரம் உண்டு.

இந்த அறிவிக்கை தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 262(1)-ன்படி ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்பட்டு, அறிவிக்கை திருமதி. பி. ரெஜிஸ்மேரி என்பவரிடம் விதிகளின்படி சார்பு செய்யப்பட்ட தேதி முதல் அவரது பதவி நீக்கம் அமுலுக்கு வரும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

**கன்னியாகுமரி மாவட்டம், இராஜாக்கமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தை சார்ந்த புத்தேரி ஊராட்சி மன்றத் தலைவரை பதவியிலிருந்து நீக்கம் செய்தல் பற்றிய அறிவிக்கை**

*(ந.க.எண் அ4/1458/2012)*

**No. VI(2)/133(a-3)/2014.**

கன்னியாகுமரி மாவட்டம், இராஜாக்கமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தை சார்ந்த புத்தேரி ஊராட்சி மன்றத் தலைவர் திரு. வி. மாரிமுத்து என்பவர் விதிகளுக்கு முரணாக புத்தேரி ஊராட்சி வடசேரி வருவாய் கிராமம் புல எண் 448 முதல் 623 முடிய உள்ள இடத்தில் மனைப்பிரிவு அங்கீகாரம் வழங்கியதால், அவரை புத்தேரி ஊராட்சி மன்றத் தலைவர் பதவியிலிருந்து தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 205(1) (அ) - கீழ் குற்றச்சாட்டுகளுக்கு விளக்கம் கோரப்பட்டது.

**தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 205 (11)-ன்கீழ் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் ஊராட்சிகளின் ஆய்வாளரின் உத்தரவு**

புத்தேரி கிராம ஊராட்சியின் தலைவர் திரு. வி. மாரிமுத்து என்பவர் மீது உள்ளூர் திட்டக் குழுமத்தின் அனுமதி பெறாத மனைப்பிரிவிற்கு தனக்கு அதிகாரம் அளிக்கப்படாத நிலையில் மனைப்பிரிவு அங்கீகாரம் வழங்கியது, வீடு கட்ட கட்டட வரைபடத்திற்கு அனுமதி வழங்கியது, நில உடமைதாரரால் சாலைகள் ஒப்படைக்கப்படாத நிலையில் மனைப்பிரிவு பகுதியில் உள்ள சாலைகள் ஊராட்சிக்கு சொந்தமானது என பொய்யான சான்றிதழ் அளித்தது, அணுகு சாலைகள்

அமைப்பதற்கு உரிய துறைகளிடமிருந்து அனுமதி பெறாதது, அரசு விதிகளுக்கிணங்க மனைப்பிரிவு இடத்தில் பொதுமக்களின் அடிப்படை தேவைகளை செய்திட ஊராட்சிக்கு பெறப்பட வேண்டிய நிலங்களை பெறாமல் இழப்பீடு செய்தது உள்ளிட்ட காரணங்களுக்காக குற்றச்சாட்டுகள் பிறப்பிக்கப்பட்டு, அதற்காக ஊராட்சித் தலைவரிடமிருந்து பெறப்பட்ட பதில்கள், ஊராட்சி மன்றத்தின் கருத்துக்கள், ஊராட்சித் தலைவரின் மறு விளக்கங்கள் ஆகியவை பரிசீலனை செய்யப்பட்டது.

இந்த அறிவிக்கையினை தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 உட்பிரிவு 205 (12)-ன்படி மறு பரிசீலனை செய்வதற்கு அரசிற்கு அதிகாரம் உண்டு.

இந்த அறிவிக்கை தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 262(1)-ன்படி ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்பட்டு, அறிவிக்கை திரு. வி. மாரிமுத்து என்பவரிடம் விதிகளின்படி சார்பு செய்யப்பட்ட தேதி முதல் அவரது பதவி நீக்கம் அமுலுக்கு வரும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

கன்னியாகுமரி,
(இருப்பு) நாகர்கோவில்,
2014 மே 28.

**எஸ். நாகராஜன்,**
*மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும்*
*ஊராட்சிகளின் ஆய்வாளர்.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.